[*1995 நவம்பர் 8*

55—

பெரம்பலூர் வட்டத்தில் கல்லூரி நிறுவுதல்

35750*-திரு. ஏ.தா. பொன்னுவேலு:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருச்சிராப்பள்ளி மாவட்டம், பெரம்பலூர் வட்டத்தில் ஒரு அரசு தொழில் நுட்பக் கல்லூரியும், ஒரு கலைக் கல்லூரியும் நிறுவ அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அரசிடம் செயற்குறிப்பு இல்லை.

திரு. ஏ.தா. பொன்னுவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அ.இ.அ.தி.மு.க. சாதாரண தொண்டனாகிய என்னை அன்புள்ளமும் அரவணைக்கும் எண்ணமும் கொண்ட கழகக் காவல் தெய்வம் நான் வணங்கும் இதயதெய்வம், என்னைச் சட்டமன்ற உறுப்பினராக இந்த மாமன்றத்திலே அமரச் செய்து, பின்னர் தமிழ்நாடு கோழி இன வளர்ச்சி வாரியத்தின் தலைவராகப் பதவியினைத் தந்ததோடு, தற்போது தலைவர் மற்றும் நிர்வாக இயக்குனர் பொறுப்பினையும் நல்கி, என்னையும் என் குடும்பத்தையும் வாழ வைக்கும் தெய்வம், தமிழகத்தின் தன்னிகரில்லா தலைவி, அன்னை, புரட்சித் தலைவியின் பொற்பாதங்களுக்கு என் நெஞ்சார்ந்த நன்றியைக் காணிக்கையாக்கி வணங்குகிறேன். அன்னையின் ஆட்சியின் அரும்பெரும் சாதனைகளை எல்லாம் சதிகாரர்களால் சாய்த்துவிட முடியாது. நாளைய சரித்திரம் சொல்லும் சகாப்தமே எங்கள் அன்னை தமிழகத்தின் நிரந்தர முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவிதான் என்று தர்மம் தலைகாக்கும்; தாயுள்ளம் கொண்ட டாக்டர் புரட்சித் தலைவியின் ஆட்சி இந்தத் தமிழ் மண்ணைக் காக்கும். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டத்தை மூன்றாகப் பிரித்து, தாயுள்ளம் கொண்ட கருணை தெய்வம், நம்முடைய தமிழகத்தின் முதல்வர், இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இந்த நீண்ட நாள் கோரிக்கையை, அந்தப் பகுதி மக்களுடைய கோரிக்கையை நிறைவேற்றும் வகையில், தேர்தல் நேரத்திலே அன்றைக்குக் கொடுத்த உறுதிமொழிகள் அனைத்தையும் நிறைவேற்றிக் கொண்டிருக்கிற தங்கத் தலைவி, திருச்சி மாவட்டத்தை மூன்றாகப் பிரித்து, உலகப்பொதுமறை

1995 நவம்பர் 8]

தந்த திருவள்ளுவர் பெயரால் திருவள்ளுவர் மாவட்டமாக அறிவித்ததற்கு, என்னுடைய சார்பாகவும், பெரம்பலூர் வட்டத்தினுடைய மக்களுடைய சார்பாகவும், என்னுடைய வரகூர் சட்டமன்றத் தொகுதி மக்களுடைய சார்பாகவும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியினைக் காணிக்கையாக்கி, நம்முடைய புரட்சித் தலைவியினுடைய ஆட்சிக் காலத்திலே துவங்கிய அந்தப் புதிய மாவட்டத்திற்கு ஒரு அரசுக் கலைக் கல்லூரியையாவது அல்லது தொழில் நுட்பக் கல்லூரியையாவது வழங்க வேண்டும். அந்தப் பகுதியிலிருந்து அதிகமான மாணவர்கள் அரியலூர், பெரம்பலூர் மற்றும் முசிறி போன்ற இடங்களிலுள்ள கல்லூரிகளுக்குச் செல்கிறார்கள். அப்படிப்பட்ட சூழ்நிலையில் இருக்கின்ற அந்தப் பகுதி மாணவர்களுக்கு, ஒரு கலைக் கல்லூரியையாவது அமைத்துத் தர நம்முடைய பொற்கால ஆட்சியினுடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-55

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிற பெரம்பலூர்-திருவள்ளுவர் மாவட்டத்தில் ஒரு அரசு கலைக் கல்லூரியும், இரண்டு நிதியுதவி பெறுகிற கலைக் கல்லூரிகளும் இயங்கி வருகின்றன. இது தவிர, சுயநிதி பொறியியல் கல்லூரி ஒன்றும் இயங்கி வருகிறது. இரண்டு பாலிடெக்னிக்குகள் அங்கே அமைந்திருக்கின்றன. இந்த மாவட்டத்தினுடைய மக்கள் தொகையையும் அங்கே இருக்கின்ற மாணவர்களின் எண்ணிக்கையையும் கருத்திலே கொண்டு, நிதிநிலை அடிப்படையிலும், முன்னுரிமை அடிப்படையிலும் அரசு தேவையான நடவடிக்கைகளை எடுக்கும்.

திரு. ஏ.தா. பொன்னுவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திங்கள் முக அழகு, திருவாய்ச் சொல்லழகு, திக்கெட்டும் தெறிக்கும் சிந்தனைப் பேரழகு, அத்தனையும் படைத்த அருந்தவப் புதல்வியே! காவிரிக் கரையில் தவழ்ந்து வந்து பாவரிக்கும் நாவெல்லாம் குடியிருக்கும் புதுப்பொருளே! தென்னாட்டு ஜான்சிராணியே! சமூக நீதி காத்த வீராங்கனையின் ஆட்சியில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து, அடுத்த ஆண்டிலாவது ஒரு தொழில் நுட்பக் கல்லூரியை அங்கே ஏற்படுத்த ஆவன செய்வார்களா என அன்போடு கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்த ஆண்டின் நிதிநிலையின் அடிப்படையில், முன்னுரிமை அடிப்படையில் இது பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. தா. செழியன்.

திரு. தா. செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களால் புதிதாக அறிவிக்கப்பட்ட மாவட்டமான பெரம்பலூர்-திருவள்ளுவர் மாவட்டந்தான் மிகவும் பின்தங்கிய பகுதி. இங்கு ஆண்கள், பெண்கள் படிப்பதற்கு தொழில் நுட்பக் கல்லூரியோ வேறு எந்தக் கல்லூரியோ இல்லை. எனவே, பயிலுகின்ற மாணவ மாணவிகள் ஏறத்தாழ 30 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள அரியலூருக்கும், 60 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள திருச்சிக்கும், 45 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள சேலம் மாவட்டம், ஆத்தூருக்கும் சென்று பயிலுவதற்கு மிகவும் கடினமான சூழ்நிலையில் இருக்கிறார்கள். எனவே, திருக்கோயில்களின் திருவாசகமாக திகழ்ந்து கொண்டு இருக்கின்ற நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவியினுடைய ஆட்சியில், அங்கே அரசு பெண்கள் கலைக் கல்லூரி ஒன்றை வருகின்ற நிதியாண்டில் நிறுவ முடியுமா என மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முன்பே குறிப்பிட்டதைப் போல, அங்கே இருக்கின்ற மாணவ மாணவியர்களின் எண்ணிக்கை அடிப்படையிலும், தேவையின் அடிப்படையிலும், அடுத்த ஆண்டினுடைய நிதிநிலையின் அடிப்படையிலும் இதுகுறித்து அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 56, திரு. செ.து. வரதராஜன், மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர்.

56—

பீடித் தொழிலாளர் நலன் காக்க நிறுவனம் அமைத்தல்

*39586-**திரு. செ.து. வரதராஜன்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பீடித் தொழிலாளர்களின் நலன்களைக் காக்க ஒரு நிறுவனத்தை அமைக்க அரசு முன்வருமா?